உ

கடவுள் துணை.

பழனியங்கிரி அறுமுகவர்

திருநீற்றுப் பதிகம்.

இவை.

குயப்பேட்டை.

வீ. இராஜு முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

சென்னை.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

14

உ

கடவுள் துணை.

பழனியங்கிரி அறுமுகவர்

திருநீற்றுப் பதிகம்.

ஆசிரிய விருத்தம்.

கொண்டகொண்டிட்டவெகு சொரூபங்களுக் கழகு கொடுக்கச்சமைந்தநீறு, கொடிய வெண்ணுயிரஞ்சமணரைக் கழுவினிற்கொலைசெய்துகண்டநீறு, துண்டகண்டப் படக்கொடூரவெஞ் சூரனுடல் துணிக்கவேல்தொட்டநீறு, சொல்லரியபூதப் பிசாசுபில்லிசூனியஞ்சுடரிட்டெரித்தநீறு, செண்டுபோற்கயிலைமலையெடுத்தவன்கூன்முதுகு செவ்வையாய் நிமிர்ந்தநீறு, சிவபத்தியில்லாத முழுமூடர்நெஞ்சந் திடுக்கிடக்கொடுத்தநீறு, அண்டநவகண்டமுதல் வணங்கித்துதித்திட ஆண்மையாய்வந்தநீறு, அடியவர்க் கருள்கிருபைபொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 1

சம்பந்தராகவே தென்னவன் கூடலிற் சமணரையழித்தநீறு, சகலகுருபரனாக அரனுக்கு வுபதேச

ந்தானுயுரைத்தநீறு, நம்பின அடியவர்கள் யிடேறவி னையோடநாதனைவந்தநீறு, நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகள்முனிசித்தர் நம்பியேபூசநீறு, கம்பமதயானை மாமுகவனுக்கிளையவன் கருதியேதந்தநீறு, காலனிட துாதனை நாடாமலென்னாளும் காக்கவேவந்தநீறு, அம் பிகைதிரிசூலி, சுந்தரி சவுந்தரி அபிராமி வல்லிதந்த, அரியவர்க்கருள் கிருபைபொழிபழனியங்கிரி அறுமு கவர்திருவெண்ணீறே. 2

அரவங்கள் பூதங்கள் மிருகங்கள் பேய்களை அடை க்கவே யிட்டநீறு, அஷ்டபாக்கிய லட்சுமி யிஷ்டமு டனென்னாளு மகலாமலிட்டநீறு, இரவுபகல் மறவாம ல் முருகர்திருநாமமே யிறைஞ்சித்தரித்தநீறு, எதிரா ளிநெஞ்சங் கலங்கிப்பயந்தோட யேற்கவேயிட்டநீறு பரவுபலபிணிகளும் உரவுகெடுகோள்களும் பணிந் தோட விட்டநீறு, பஞ்ச பாதகமுடன் மிஞ்சிடுவ ல்வினைபணிந்திடவணிந்தநீறு, அரசனுடன் மந்திரியா ண்புலிவீரருமதிவசிய மானநீறு, அடியவர்க்கருள்கிரு பைபொழிபழனியங்கிரிஅறுமுகர்திருவெண்ணீறே

இருப்பானதலமெலா மென்றுந்துதிப்பவற் கேடேத் தஞ் செய்யுநீறு, எங்கெங்கிருந்தாலு மேத்திப்பணி

ந்திட வெதிராகலிற்குநீறு, திருப்பரங்குன்றமுஞ்செந் திகதிர்காமமுந் திருச்சோலேக்குகந்தநீறு, திருததணி சுவாமிமலே திருவேரகம்புகழ் செவ்வேளர் தந்தநீறு, பொருப்புகள்முடிதோறும் பதகமலமுத்திரை புகழ் பெருக வந்தநீறு, பூசைசெய்யைவராற் றிருவாவினன் குடி போதிக்கவந்தநீறு, அருட்பாதநத்தியே நினேப்ப வர்கள் நெஞ்சினில் அகலாதிருந்தநீறு, அடியவர்க்க ருள்கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெ ண்ணீறே. 4

நூலேப்பகுந்திடை மாதர்க்குவேலாக நுதலிற்றறித் தநீறு, நூறுநூறுயிர மிமிசைவந்தாலுமொரு கொடி யிற்றலேக்குநீறு, வேலேக்கடிந்து வெகு சூரர்கள் மடி யவே வெற்றிவேல் தொட்டநீறு, வேதனேச்சிறையிட் டு பிரணவத் துட்பொருள் விமலற்குரைத்தநீறு, வா லேப்பருவமாய் வயது றாறுகவே வசிபகரமானநீறு, மா றுகசெல்வமும் பேறுனவாழ்வுடன் வரிசைதற வந்த நீறு, ஆலவாய்ச்சொக்கருடன் ஆனந்த தாண்டவம் ஆடிச்செழித்தநீறு, அடியவர்க் கருள்கிருபை பொழி பழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 5

ஓராறுசென்னியு மீராறுபுயமுமென்னுள்ளம் பதிந்தநீறு, ஓதுதமிழ் மதுரையி லூமைபெண்பேசவே உபதேசமானநீறு, காரணையமுகவனுக் கிளையவன்விராலிமலைக் காங்கேயன் தந்தநீறு, கயிலைமலைபொருநொடியில் அரனைவலமாகவே காணவேவந்தநீறு, பேரானவசுரருங் குன்றமும் வேலாற் பொடிபடத்துணித்தநீறு, பொற்சந்தி மலையிலுறை வள்ளியிடநாயகன் பொன்னடி வணங்குநீறு, ஆரோடு செஞ்சடைக் கையிலைநாயகனுமைக் கழுதுபெறவந்தநீறு, அடியவர்க்கருள்கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 6

எத்தேசகாலமும் முத்தையரென்பவர் கேழைக்குரங்குநீறு, எழிலானகிருத்திகை தவறும லனுஷ்டிக்க வின்பங்கள் தந்தநீறு, சிற்றிடைவள்ளியுடன் தினைப்புனங்காத்திடச் சிவசித்தாய்நின்றநீறு, சிற்றாறுவேடர்கள்சிவபத்தராகவே திருவுருக்கொண்டநீறு, முத்தமிழ்க்காகவே அருணகிரிநாதர்க்கு மோட்சங்கொடுத்தநீறு, முப்பத்துமுக்கோடிதேவாதிதேவரும்முருகரெனவந்தநீறு, அத்தனருள் கந்தனூர் நித்தம் விளையாடவே யகலாமலிட்டநீறு, அடியவர்க்கருள்கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 7

வேதாளபூதப்பிசாசுபில்லிசூனிய மிரட்டித்துரத் துநீறு, வெண்டையந் தண்டையொடு கிண்கிணிசிலம் பசைய வீரவேல்தொட்டநீறு, சூதானகளபமுலைவள் ளியிடநாயகன் சுப்பிரமணியர் தந்தநீறு, தும்புருநார தர்கிம்புருடர்போற்றித்துலங்கவேவந்தநீறு, ஓதுமுரு காவென்று உள்ளங்குளிரவே உற்றதுணையானநீறு, ஓம்நமசிவாயகுரு ஞானதிதேசிகன் ஒழிவாகிவந்த நீறு, ஆதாரமாகவே நெஞ்சினிலெப்பொழுது மறிவா கநின்றநீறு, அடியவர்க்கருள்கிருபை பொழிபழனிய ங்கிரி அறுமுகவர்திருவெண்ணீறே 8

துஷ்டப்பிசாசுபிணி கிட்டவொட்டாமலே சுடரி ட்டெரித்தநீறு, சுற்றவே நிற்கின்ற அஷ்டதிசை பால ரும் சொல்லுமுன் வணங்குநீறு, வட்டவமாய்ப்படர் மேகம் பதினெட்டு குஷ்டமும்வாராமற்பூசுநீறு, வாழ ரவம் வண்டுகெடிசிலந்திதேள் விஷமெல்லாம்வாங்கவும ணிந்தநீறு, கொட்டமிடு சூரைவெட்டிபலியிட்டுசெ யங் கொள்ளவேவந்தநீறு, கூறுமொழிநக்கீரர்மேன் மைபெற வேல்வாங்கிகுன்றைப்பிளந்தநீறு, அஷ்டதி சைபதினாறு முட்கோண சட்கோணமறுபத்துநாலுக லையும், அடியவர்க் கருள்கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 9

மருமலர்க்கமலத் துதித்தவன் கிளைவழி வாழ்விக்கவந்தநீறு, மன்னுபிரமாமுனி அகஸ்தியர்போகருடன்வழிகொள்ளவந்தநீறு, சரணமலரன்பனுங்குலாலகுலத்திருக்கை தண்டமிட்டுதவுநீறு, சண்முகநதிமூழ்கி கிரிவலம் வந்தோர்க்கு சகலபிணிதீர்த்தநீறு, வருமைபடுமெளியார்க்கு கொலைசெய்த பாவர்க்கும்வருவிரதமொத்தநீறு, வாழ்வுகிர்த்திகைசோமசுக்கிரவாரஞ்சஷ்டிவந்திப்போர்க்கருளுநீறு, அறுமறைகள்பறவுகுருசிவசமயந்தழைக்கவே யவதரித்தருளுநீறு, அடியவர்க்கருள்கிருபைபொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 10

பத்துக் கவிதையு மனத்திற் றுதிப்போர்க்குப்பாக்கியந் தந்தநீறு, பரிவாக யெந்நாளுஞ் சரவணபவாவென்ன பரிசுபெற வைக்கும்நீறு, கஸ்தூரிகுங்குமங்கமழ்வெள்ளிநாயகன் காங்கேயன்தந்தநீறு. கார்த்திகை நாள்தோன்றி வெற்றிவேலாயுதன் கடம்பனுர்கந்தநீறு, முத்துநவரத்தினத் தண்டையணிபாதனன்முடிமேற்றரித்தநீறு, முழுநீலமயிலேறி வந்துமுன்னின்றுமே முன்கையிற் றந்தநீறு, அத்தனுர்பங்கினிற் சத்துருசங்கரியாய் அபிராமி வல்லிதந்த, அடியவர்க்க

ருள்கிருபைபொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 11

வட்டச் சடாட்சரச் சரவணபவாவென்று மதியிற்றுதிக்கும்நீறு, வாதாடிவந்தெதிர்த்திட்டபூதங்களை மார்பைப்பிளந்தநீறு, இஷ்டமுடன் சரியையொடுகிரியையோகஞான மேற்கவேதந்தநீறு, இன்பாகவேகயிலை மலையேறிமோட்சத்தி லிருக்கத்தந்தநீறு, எட்டுத்திசையதிர மயிலேறி யுல்கைவல மிமைக்குமுன் வந்தநீறு, இமையவர்முனிவர்கள் தேவேந்திரன்முதி யிடரக்களிட்டநீறு, அஷ்டதிசைபெற்றதீ வேழுமீரேழுலகராசாளவந்தநீறு, அடியவர்க்கருள்கிருபைபொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 12

திருநீற்றுப்பதிகம்.

முற்றிற்று.